**11.10 மோட்டார் வாகனம் – பேரூராட்சிகள் நிர்வாகம் – பேரூராட்சிகளுக்கு புதிய மோட்டார் வாகனங்கள் வாங்குவது–பேரூராட்சிகள் இயக்குநருக்கு அனுமதி அளிக்கும் அதிகாரம் – ஆணை வெளியிடப்படுகிறது.**

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை

அரசாணை (நிலை) எண்.132 நாள் : 30.7.98.

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.152, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை, நாள் 10.6.97.
2. பேரூராட்சிகள் இயக்குநரின் கடித எண். ந.கக11737/98/டி3, நாள் 22.5.96 மற்றும் 30.6.98.

**ஆணை:**

பார்வை 1ல் கண்ட அரசாணையில் பேரூராட்சிகளில் ஏற்கனவே உள்ள பழைய வாகனங்களைக் கழிவு செய்து மாற்று வாகனங்களை வாங்குவதற்கு மட்டும் பேரூராட்சிகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு அரசின் முன்அனுமதி தேவையில்லை என்றும் தற்போது வாகனங்களைக் கழிவு செய்வதற்கு வகுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு மோட்டார் வாகன ஆய்வாளரின் சான்றிதழின் பேரில் பேரூராட்சிகள் இயக்குநரின் முன் அனுமதி பெற்றபின் வாகனங்கள் வாங்கலாம் என்றும் அரசு அனுமதி வழங்கி ஆணையிட்டது.

2. பேரூராட்சிகள் இயக்குநர் தனது 22.5.98 நாளிட்ட கடிதத்தில், பேரூராட்சிகளின் நிதிநிலைமை கணிசமான அளவில் உயர்ந்துள்ளதாலும், அதிக அளவில் பணிகள் மேற்கொள்ள வாய்ப்புகள் இருப்பதாலும், பேரூராட்சி மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் கருத்துருக்கள் அனுப்பி வைக்கப்பட்டு, பேரூராட்சிகள் மன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் தங்களுடைய பேரூராட்சிகளில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை கண்காணிக்கவும், மோட்டார் வாகனங்கள் அவசியம் என்றும் இவைகளுக்கு விரைவில் அங்கீகாரம் வழங்குமாறு கோரி அடிக்கடி தெரிவித்து வருகின்றனர் என்றும், இதன் அடிப்படையில் சில கருத்துருக்கள் அரசின் அனுமதிக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது என்று அவர்களுக்கு தெரிவிக்க வேண்டியுள்ளது என்றும் பேரூராட்சிகள் இயக்குநர் தெரிவித்துள்ளார். குடிதண்ணீர் விநியோகம், கழிவு நீர் அகற்றுதல், குப்பைகளை அகற்றுதல் போன்ற மிக அத்தியாவசிய பணிகளுக்கு இந்த வாகனங்கள் தேவையென பல பேரூராட்சி மன்றங்களில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, பேரூராட்சிகள் தங்களது பொதுநிதியிலிருந்தோ, அரசுத் திட்டங்கள் வாயிலாகவோ மோட்டார் வாகனங்கள் வாங்க, அனுமதி அளிக்கும் அதிகாரத்தை பேரூராட்சிகள் இயக்குநருக்கு அளித்துத் தக்க ஆணைகள் பிறப்பிக்குமாறு பேரூராட்சிகள் இயக்குநர் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி 2–ல் உள்ள பேரூராட்சிகள் இயக்குநரின் கோரிக்கையினை பேரூராட்சிகளின் தற்போதைய நிதிநிலை, அங்கு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்ட வரும் பல்வேறு அடிப்படை வசதிக்கான பணிகள் ஆகியவைகளை கருத்தில் கொண்டு அரசு கவனமாக பரிசீலனை செய்தது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு நகராட்சிகளின் பொது நிதியிலிருந்து புதிதாக வாகனங்கள் வாங்க அனுமதி எற்கனவே அரசால் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், பேரூராட்சிகள் இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில் உபரியாக நிதி உள்ள பேரூராட்சிகளுக்கு அதன் பொதுநிதியிலிருந்து புதிதாக வாகனங்கள் வாங்க அனுமதி அளிக்கும் அதிகாரத்தை பேரூராட்சிகள் இயக்குநருக்கு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.280/ADS/ G/98–1, நாள் 12.7.98–ல் வழங்கியுள்ள ஒப்புதலின்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ்.மாலதி,**
அரசுச் செயலாளர்.